DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **STC. No.365/2025** |
| Deposition of witness for | Prosecution **PW -1**<br>Deffence<br>Court |

Name : **திரு.நிருபன் சக்கரவர்த்தி**

Father's/Husband's Name: திரு.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.06.2026

**(1, 2 எதிரிகள் ஆஜரில் இல்லை. 1, 2–ம் எதிரிகள் சார்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது கூடலூர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2024 அன்று உதவி ஆய்வாளர் திரு.குகனேஸ்வரன் தலைமையில் நானும் காவலர் மூவின் ஆகியோரும் நிலைய அலுவலில் இருந்த போது தகவலாளி ஒருவர் கொடுத்த ரகசிய

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.10 19:22:03 +0530

தகவலின் பேரில் 18.00 மணிமுதல் 19.00 மணிக்குள் கூடலூர் பேருந்து நிலையம் சென்று கண்காணிக்க செல்வதாக தாங்கள் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் சுமார் 18.00 மணிக்கு புறப்பட்டு சுமார் 18.15 மணியளவில் கூடலூர் பேருந்து நிலையம் சென்று இரகசிய தகவலாளி மறைந்திருந்து அடையாளம் காட்ட ஒரு வித அச்சத்துடன் இருந்தவரை பிடித்து உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர் முகவரியை முன்னுக்கு பின்முரணாக மாறி மாறி சொன்னார். இறுதியாக அவர் தன்னுடைய பெயர் மற்றும் விலாசத்தை சக்திவேல், த/பெ. பழனிசாமி, க.எண். 11/307 GC முத்தமிழ் நகர், கூடலூர் என்று கூறினார்.

3. உதவி ஆய்வாளர், எதிரியிடம் உங்களிடம் கஞ்சா உள்ளதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், உங்களை ஏதேனும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி அல்லது நீதித்துறை நடுவர் முன்னிலையிலோ அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டபோது, அவர் என்னை நீங்களே சோதனையிடலாம் என்று கூறி எழுத்துமூலமாக சோதனையிட அனுமதி கடிதம் அளித்தார். என்னிடம் காட்டப்படும் அந்த கடிதத்தில்தான் எதிரி கையெழுத்து செய்துகொடுத்தார். **(அந்த சோதனை விருப்ப கடிதம் அ.சா.ஆ.1 ஆகும்)**.

4. அவரை உதவி ஆய்வாளர் சோதனை செய்து பார்த்தபோது, அவர் தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் ஒரு பாலிதீன் கவரில் சுற்றி வைத்திருந்த ஒரு பொட்டலத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை பிரித்து பார்த்தபோது, அதில் காய்ந்த இலை மற்றும் விதையுடன் கூடிய அரசால்

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.10 19:22:07 +0530

தடை செய்யப்பட்ட போதை பொருளான கஞ்சா இருந்தது. அதை நுகர்ந்து பார்க்க கஞ்சா வாடை அடித்தது இருப்பினும் அவை கஞ்சா தானா என்ற சந்தேகத்தின் பேரில் சிறிது எடுத்து தீ வைத்து பார்க்க அதில் கஞ்சா நெடியுடன் கூடிய கஞ்சா வாடை அடித்தது.

5. உதவி ஆய்வாளர் இதுபற்றி எதிரியிடம் கேட்டதற்கு இது கஞ்சாதான் என்று தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் எதிரியை கஞ்சா என்னும் போதை பொருட்களை சட்டவிரோதமாக விற்பனைக்கு வைத்திருந்தத குற்றத்திற்காக கைது செய்வதற்காக காரணத்தை கூறி சுமார் 18.35 மணிக்கு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் எதிரியை கைது செய்தார்.

6. பின்னர் உதவி ஆய்வாளர் எதிரியை விசாரித்தபோது எவ்வித அச்சுருத்தலோ ஆசை வார்த்தைகளோ துன்புறுத்தலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் காவலர் மூவின் என்பவர் முன்னிலையிலும் சுமார் 18.40 மணிமுதல் 19.10 மணிவரை பதிவு செய்தார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் கூடலூர் பகுதியை சேர்ந்த ரியாஷ் என்பவரிடம் கஞ்சா என்னும் போதை பொருளை வாங்கி அதை தனது நண்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அதிக விலைக்கு விற்பனை செய்து வந்ததாக வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான்.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.10 19:22:12 +0530

**(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி – அ.சா.ஆ.2 ஆகும்)**

7. பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா என்னும் போதை பொருளை நாங்கள் ஏற்கனவே கொண்டு வந்த எலக்டிரிக் தராசில் எடை போட்டு பார்த்தபோது அதில் சுமார் 25 கிராம் காய்ந்த இலை மற்றும் விதையுடன் கூடிய அரசினால் தடை செய்யப்பட்ட போதை பொருளான கஞ்சா இருந்தது. மேற்படி 25 கிராம் கஞ்சாவை எங்கள் முன்னிலையில் சுமார் 19.15 மற்றும் 19.30 மணிவரை கைப்பற்றினார். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வழக்கு சொத்து தான் அன்றைய தினம் 1–வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது. பின்னர் 19.45 மணியளவில் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் நிலையம் வந்து எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. இந்த வழக்கின் சொத்தானது எந்த எதிரியின் கையில் இருந்தது என்றால் 1–வது எதிரியின் கையில் இருந்தது. சம்பவ தினத்தில் எதிரிகள் இருவரும் நல்ல நிலையில் தான் இருந்தார்கள் என்றாலும், மது போதையிலோ அல்லது கஞ்சா போதையிலோ இல்லை என்றால் 1–வது எதிரியிடம் கஞ்சா வாடை வீசியது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.10 19:22:20 +0530

2. ஒரு நிபுணர் ஆய்வு செய்து சொன்னால் தான் எதிரியிடமிருந்து வந்தது கஞ்சா வாடை என்று எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. எங்களுக்கே தெரியும். எதிரியும் ஒப்புக் கொண்டார். என்னிடம் காண்பிக்கப்படும் சோதனை விருப்பக் கடிதத்தை நாங்கள் தான் தட்டச்சு செய்தோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திலேயே எதிரியிடமிருந்து கையொப்பம் எல்லாம் பெற்ற பின்பு தான் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்தோம் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் சொல்லப்படும் மின்சார எடை இயந்திரம் எங்கள் காவல் நிலையத்திற்குரியது என்று ஆவணங்கள் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக கஞ்சா வழக்குகளில் பொது சாட்சிகள் இருப்பதில்லை என்றால் சரிதான். யாரும் முன்வருவதில்லை. எதிரிகள் மீது வேறு வழக்குகள் உள்ளதா என்றால் உள்ளது. எதிரிகள் மீது முன் வழக்குகள் இருப்பதால் அவர்கள் மீது புள்ளிவிவர கணக்கிற்காக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நான் அதில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. சோதனை விருப்பக் கடிதம் எதிரி தான் எழுதிக் கொடுத்திருக்க வேண்டுமென்று சொன்னால் அவருக்கு எழுத தெரியாததால் நாங்கள்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.10
19:22:24 +0530

தட்டச்சு செய்தோம். எதிரிக்கு எழுத தெரியாது என்ற விவரத்தினை சோதனை விருப்பக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.10 19:22:28 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**